**DEPOSITIONS OF WITNESS**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE TIRUPPUR**

**CASE No** :SC 12/2023
Prosecution Witness 1
Defence
Court ASJ

Deposition of witness for PW 3
Name : Pradab

Father Name : Kannaiyan
Village
Taluk
Caste
Calling
Religion
Age : 26

Solemnly afirmed in accordance with the provisions of act X of 1873 of the day of 18.04.2023.

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் காங்கேயம் ரோடு ராக்கிய பாளையம் பிரிவு மணிக்கார பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். பிரின்டிங் வேலை செய்து வருகிறேன். அ.சா 1 என்னுடைய அண்ணன். அ.சா 2 என்னுடைய வீட்டிற்கு பக்கத்தில் குடியிருந்து வருகிறார். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகளில் சுவன்ராஜ் மஞ்சள் சட்டை அணிந்து இருப்பவரை தெரியும். என்னுடைய அண்ணனிடம் பஞ்சமி நிலையத்தை பெற்று தருவதாக சொல்லி பல முறை வீட்டிற்கு வந்துள்ளார். மேற்படி பஞ்சமி நிலம் பெற்று தருவது சம்மந்தமாக இருப்பிட சான்றிதழ் பெற்று தருவதாகவும் வருமான சான்றிதழ் பெற்றுதருவதாகவும் சொல்லி எங்கள் பகுதியை சேர்ந்து பல நபர்களிடம் பணம் பெற்றுள்ளார். அவர் பணம் வாங்கி சென்று 3 மாதம் ஆகியும் நிலம் பெற்று தரவில்லை லஎன்பதால் பணம் கொடுத்த நபர்கள் என்னுடைய அண்ணனிடம் வந்து கேட்டார்கள். அதனால் என்னுடைய அண்ணனும் சமூக நீதிகட்சியின் மாவட்ட தலைவரும் ஆன வீரசாமி என்பவரும் 1ம் எதிரி சுவன் ராஜ் வீட்டிற்கு சென்று கேட்டார்கள். அவர்கள் சென்ற போது சுவன் ராஜ் வீட்டில் இல்லை என்பதால் வீட்டில் இருந்த அவரது அம்மாவிடமும் மனைவியிடமும் அனைவரும் வந்து பணம் கேட்கும் விவரத்தை சொல்லிவிட்டு வந்தார்கள். கடந்த 20.12.2021 தேதியில் இரவு 8 மணியளவில்

சுவன்ராஜ் என்னுடைய அண்ணனுக்கு போன் செய்து அது சம்மந்தமாக பேசி கொள்ளலாம் என்று சொன்னார் அப்போது நானும் வீட்டில் இருந்தேன். என்னுடைய அண்ணன் சுவன்ராஜ் அழைப்பதாகவும் பேசி விட்டு வருவதாகவும் சொல்லிவிட்டு சுவன் ராஜுடன் சென்றார். பின்னர் இரவு 10.30 க்கு மணிக்கு மேல் குனசேகரன் போன் செய்து என்னுடைய அண்ணனை மன்னரையிலிருந்து மணியக்கார பாளையம் கருப்பு சாமி கோவில் அருகில் வைத்து சுவன் ராஜ் மற்றும் அவருடைய ஆட்களும் சேர்ந்து வெட்டி விட்டதாகவும் திருப்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்துள்ளதகாவும் சொன்னார். நான் சென்று பார்த்தபோது என்னுடைய அண்ணனுக்கு வலது கையிலும் பின்னந்தலையிலும் வலது கால் முட்டியிலும் அடிப்பட்டு இருந்தது. இடது கை கட்ட விரல் துண்டாகியிருந்தது. அ.சா 1 சிகிச்சையில் இருந்த போது போலீசார் அ.சா 1 யிடம் வாக்கு மூலம் பெற்றார்கள். அவருக்கு இரண்டு கையிலும் காயமாக இருந்ததால் கையெழுத்து போட முடியவில்லை அதனால் வலதுகை பெறுவிரல் ரேகை பெற்றார்கள். அவர் புகார் வாக்கு மூலம் அளித்தபோது நானும் உடன் இருந்ததால் வாக்கு மூலத்தில் என்னிடமும் சாட்சி கையொப்பம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்கு மூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் கையெழுத்து அரசு தரப்பில் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI

Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2023.04.18 18:21:55 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.